பக்கங்கள் 19 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 15 ஞாயிற்றுக்கிழமை 28.04.2024 அதிர்வு 272

### குற்றம் எதுவும் செய்யாத நான்

## எந்தவொரு நாட்டுக்கும் தப்பியோடவேமாட்டேன்



### மைத்திரி இப்படி விளக்கம்

“நான்தென்கொரியாவுக்குத் தப்பிச் செல்லவுள்ளேன் என்று வெளியாகியுள்ள செய்திகள் பொய் யானவை.

04

# பஸில் கூறுவதற்கேற்ப ஆட நான் பொம்மை கிடையாது!

## நீதி அமைச்சர் விஜயதாஸ காட்டம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ கூறுவதற்கேற்ப ஆட நான் ஒன்றும் பொம்மை கிடையாது என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நான் நியமிக்கப் பட்டுள்ளமை தொடர்பில் பஸில் ராஜ பக்ஷ பெரும் ஆத்திரம் கொண டுள்ளார்.

அதன் காரணமாக என்னை அமைச்சுப் பதவியில் இருந்து

04

### எனக்கு எதிரிகள் இல்லை! 220 இலட்சம் பேரும் எனது நண்பர்களே!!

# வாக்குகளைச் சுருட்டிக்கொள்வதற்காக பிரிவினைகளைத் தோற்றுவிக்க முயற்சி

## மக்கள் மத்தியில் சஜித் குற்றச்சாட்டு





“இந்த நாட்டில் எனக்கு எதிரிகள் இல்லை. 220 இலட்சம் பேரும் எனது நண்பர்களே.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 166 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா

04

# பாடசாலைக்குச் சென்ற 15 வயது மாணவி மாயம் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(த.சுபேசன்)

பாடசாலைக்குச் சென்ற 15 வயது மாணவி ஒருவர் வீடு திரும்பவில்லை என்று சாவகச்சேரிப் பொலிஸ் நிலை யத்தில் மாணவியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை காலை சாவகச் சேரியில் அமைந்துள்ள பாடசாலைக்குச்




செல்வதாக வீட்டில் கூறிச் சென்ற மாண வியே இரவாகியும் வீடு திரும்பாமையால் பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கச்சாய் வீதிப் பகுதியைச் சேர்ந்த மாணவியே இவ்வாறு காணாமல் போயுள்ளார். முறைப்பாட்டை அடிப்படை யாக வைத்து சாவகச்சேரிப் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்.

# விஜயதாஸவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## மொட்டுக் கட்சி தீர்மானம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் பதவியை ஏற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பெரமுன கட்சி தீர்மானித்துள்ளது.

தமது கட்சி ஊடாக நாடாளுமன்றம் தெரிவாகிவிட்டு, கட்சி உறுப்புரிமையில் இருந்துகூட விலகாமல், மற்றுமொரு கட்சியில் பதவியை ஏற்றமை குறித்தே அவருக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மொட்டுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் கட்சியின் ஒழுக்காற்று விசாரணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளது எனவும், விஜயதாஸ ராஜபக்ஷ அழைக்கப்பட்டு இது தொடர்பில் விளக்கம் கோரப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

# வவுனியாவில் இளைஞர் ஒருவர் ஹெரோயினுடன் கைது!



(கே.வசந்தன்)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஏ - 9 வீதி ஓமந்தைப் பகுதியில் இளைஞர் ஒருவரை வழிமறித்துச் சோதனை செய்தனர்.

இதன்போது இளைஞர் ஒருவரின் உடைமையில் இருந்து 6 கிராம் ஹெரோயின போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இதையடுத்து மதவுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் அந்த இளைஞரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# முதலுதவி பயிற்சிப் பட்டறை



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு முதலுதவி பயிற்சிப்பட்டறை நிகழ்வு வியாழக்கிழமை கல்லூரி பேஜ் மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் 35 மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

# ஒற்றையாட்சி முறைமைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் பேராயர்!

## முஸ்லிம் தலைவர்களும் இதனைச் செய்ய வேண்டும் என்று கஜேந்திரன் கோரிக்கை

"இலங்கைக்குச் சாபக்கேடாக மாறியுள்ள ஒற்றையாட்சி முறைமையை நீக்க வேண்டும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுக்க வேண்டும். முஸ்லிம் தலைவர்களும் இதனைச் செய்ய வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், முதுகெலும்பிருந்தால் ஒற்றையாட்சி நீக்கப்பட்டு, சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பை சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் வெளியிட்டும் என்றும் அவர் சவால் விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகளைத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சொல்கின்றார். தாக்குதலுக்குப்



பின்னரும் அவர் ஜனாதிபதிப் பதவியில் இருந்தார். எனவே, அரச இயந்திரம் மற்றும் புலனாய்வுப் பிரிவைப் பயன்படுத்தி இதற்குரிய நடவடிக்கையை ஏன் அவர் எடுக்கவில்லை?

75 ஆண்டுகளாக இந்த நாட்டை குட்டிச்சுவராக்கிக்கொண்டிருக்கும் இந்த ஒற்றையாட்சி முறைமையை மாற்றுமாறு பேராயர் கோரிக்கை முன்வைக்க வேண்டும். கத்தோலிக்க சமூகம் மீது கரிசனை கொண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பற்றி பேராயர் தொடர்ச்சியாகப் பேசி வருகின்றார். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்கக்கூடாது என்றால் இந்தக் கோரிக்கையை விடுக்குமாறு அவரிடம் மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல் முஸ்லிம் தலைவர்களும் ஒற்றையாட்சி முறைமைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

சஜித் பிரேமதாஸவாக இருக்கலாம், அநுரகுமார திஸாநாயக்கவாக இருக்கலாம், இவர்கள்கூட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தமாட்டார்கள். ஏனெனில் இவர்கள்கூட இலங்கையானது சிங்கள, பௌத்த ஒற்றையாட்சி கொண்ட நாடாகவே இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். அவர்களிடம் நேர்மை இருந்தால் ஒற்றையாட்சி முறைமையை அழித்து, சமஷ்டி முறைமை கொண்டு வரப்படும் என அறிவிக்கட்டும். முதுகெலும்பிருந்தால் அவர்கள் இதனைச் செய்யட்டும்." – என்றார்.

# கந்தப்பளை பார்க் தோட்ட ஆலய வருடாந்தத் திருவிழா





(ஆ.ரமேஸ்)

நுவரெலியா – கந்தப்பளை பார்க் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ பாலதண்டாயுதபாணி, ஸ்ரீ கிராமத்து முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி 25 ஆம் திகதி வரை இடம்பெற்றது. சிவஸ்ரீ.ச. அருள்சர்மா குருக்கள் தலைமையில் இந்தப் பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# 70 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது!

(கே.வசந்தன்)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் 70 போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாபாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

பூந்தோட்டம் பகுதியில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் திடீர் சோதனை முன்னெடுக்கப்பட்டபோது அந்தப் பகுதியில் உள்ள சிறிய கடை ஒன்றில் வைத்து போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாபா விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது, குறித்த கடையில் இருந்து 70 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் கிராம் கஞ்சா கலந்த மாபாவும் மீட்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த வியாபார நிலைய உரிமையாளரான மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்















## வாக்குகளைச்...

பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கம்பஹா, அத்தனகல்ல, ஊராபொல மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. பிரதேச மக்கள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பாடசாலை நிகழ்வொன்றில் நான் நண்பர்களே என விழித்தேன். இந்த மாணவர்கள் கூட எதிரிகள் அல்ல, நண்பர்கள். நட்பின் கரமே நீட்டப்பட்டது. பிள்ளைகளுக்கான நிலைபேறான வளமான கல்விக்கு உதவிக்கரம் நீட்டவே பாடசாலைகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.நண்பர்களே என விழித்துப் பேசுவதையும் சிலர் விமர்சித்து வருகின்றனர். இனம், மதம், வர்க்கம், கட்சி, சாதி வேறுபாடின்றி 220 இலட்சம் மக்களும் எனது நண்பர்களே.

வாக்குகளைச் சுருட்டிக்கொள்வதற்காகவே சிங்களம் மட்டும், தமிழ் மட்டும் எனக் கூறி பிரிவினைகளைத் தோற்றுவிக்க முனைகின்றனர். இந்தப் பொய்களை நம்பி ஏமாந்து விட வேண்டாம்.

பொய்யான தீவிரவாத அரசியலை முன்னிலைப்படுத்தி, பாடசாலை, பல்கலைக்கழகங்கள், நூலகங்களை எரித்த காலம் இருந்தது. மீண்டும் இத்தகையதொரு காலம் எமக்குத் தேவையில்லை.” – என்றார்.

இந்நிகழ்வில், பாடசாலையின் இதர தேவைகளைக்காக ஒரு இலட்சம் ரூபா நிதியை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரிடம் நன்கொடையாக எதிர்க்கட்சித் தலைவர் வழங்கி வைத்தார்.

---

## எந்தவொரு...

குற்றம் எதுவும் செய்யாத நான் தென்கொரியாவுக்கோ அல்லது உலகின் வேறு எந்த நாடுகளுக்கோ தப்பிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடும் அரசியல் நெருக்கடிகளையும், வழக்குகளையும் எதிர்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தென்கொரியாவுக்குத் தப்பிச் சென்று அங்கு தஞ்சமடைய உத்தேசித்துள்ளார் என்று சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அந்தச் செய்திகளை மறுதலித்து இன்று கருத்துத் தெரிவிக்கும்போதே மைத்திரி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“அரசியல் எதிரிகளால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை நான் வன்மையான கண்டனங்களுடன் அடியோடு நிராகரிக்கின்றேன்.

நீதிமன்றத்தின் தடை உத்தரவு இருப்பதால், கம்பஹா மாநகர சபையில் சர்வதேச தொழிலாளர் தினத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ளனர்.” – என்றார்.

---

## பஸில்...

நீக்குவதற்கு அவர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

எனினும், அவர் நினைப்பதைப் போன்று நான் ஒன்றும் சிறுபிள்ளை கிடையாது. நான் விஜயதாஸ ராஜபக்ஷ, அதுவும் சட்டத்தை நன்றாக அறிந்த நீதி அமைச்சர். பஸில் ராஜபக்ஷ கூறுவதற்கு ஏற்ப ஆட நான் ஒன்றும் பொம்மையும் கிடையாது. எனவே, பஸில் அவரால் முடிந்ததைச் செய்து கொள்ளட்டும். அதனை நீதி மன்றத்தில் சந்திக்க நான் தயாராகவே இருக்கின்றேன்.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு ஒன்றுகூடியே என்னைப் பதில் தலைவராக நியமித்துள்ளது.

அந்த விடயம் சட்டபூர்வமாகவே நடைபெற்றுள்ளது. அதனையும் யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது.” –



# விளை நிலங்கள் விற்பனைக்கா?

## திருகோணமலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(எச் எம் ஹலால்தீன் )

திருகோணமலை மாவட்டம், முத்துநகர் பிரதேச விவசாயிகளின் விவசாய நிலங்களைத் தனியார் நிறுவனங்களுக்கு நீண்ட கால குத்தகைக்குக் கொடுக்கும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரித்து இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முத்துநகர் ஆர்.டி.எஸ். கட்டடத்தில் இருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் வயல் நிலம் வரை சென்றடைந்து பின்னர் மீண்டும் அவ்விடத்தை வந்தடைந்தது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,


“நீண்ட காலமாக குடியிருந்து வரும் எமது குடியிருப்புகளையும் விவசாய நிலங்களையும் விட்டு வெளியேறுமாறு துறைமுகங்கள் அதிகார சபை அதிகாரிகள் கூறி வருகின்றனர்.


இந்தியாவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு நாங்கள் வாழுகின்ற பூமியைக் கொடுப்பதற்கு அவர்கள் திட்டமிட்டு வருகின்றனர்.

1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இங்கு எமது மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

நாம் பரம்பரையாக வாழ்ந்து வரும் நிலத்திலிருந்து வெளியேறப்போவதில்லை.” – என்றனர்.

இந்த ஆர்பாட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் ராசிக் ரியாசுதீனும் கலந்துகொண்டார்.












# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் திருமலை தம்பலகாமத்தில் சாட்சியம் அளிப்பு

**(ஹஸ்பர் ஏ.எச்., எச் எம் ஹலால்தீன் )**

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் தகவல் பெறும் செயற்பாடுகள் தம்பலாமம் பிரதேச செயலாக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழு உறுப்பினர்களால் தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இது முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையின் இடம்பெற்ற இந்த நிகழ்வில், காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுளந்த, காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் மன்னார் மாவட்ட பிராந்திய இணைப்பாளர் நிஷாந்தன், காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விசாரணைக்காக, தம்பலகாமம், கந்தளாய், மொறவெவ பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்த சுமார் 48 குடும்பங்கள் காணாமல் போனோர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் உறவினர்கள் வாக்களித்ததோடு அதற்கான ஆதாரங்களையும் சமர்ப்பித்தனர்.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புலிகளின் நிலைப்பாடு

ஒன்றரை தசாப்த காலத்துக்கு முந்திய ஈழத் தமிழர்களின் அரசியல் குறித்து பேசுபவர்கள் - பிரஸ்தாபிப்பவர்கள் - ஒரு சந்தேகத்தை எழுப்பத் தவறுவதில்லை.

அது - ஆயுத வலிமையுடன் மிகப் பலமாக இருந்த புலிகள், அச்சமயத்தில் ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான தீர்வு ஒன்றை புத்திசாலித்தனமாக பெற்றிருக்கலாமே? ஏன் அதை அவர்கள் செய்யவில்லை? தமது ஆயுத வலிமை மீது அத்தனை நம்பிக்கை வைத்து சமாதான - சமரச - வாய்ப்புகளை அவர்கள் குழப்பி அடித்தமை ஏன்? வன்முறைப் பிரியர்களாக மட்டும் நடந்து கொண்டமை எதற்காக? ஏன் இந்த முட்டாள்தனம்?

- இதுதான் பல மட்டங்களிலும் எழுப்பப்படும் புத்திபூர்வமற்ற கேள்வி.

புலிகளின் தலைமையுடனும், அவர்களின் கொள்கை வகுப்பாளர்களுடனும் நெருக்கமாகப் பழகியவர்களுக்கு மட்டுமே இச்சந்தேகங்ளுக்குப் பின்புலத்தில் உள் தாற்பரியமாகப் புதைந்து கிடக்கும் நியாயமான அம்சங்கள் புரியும்.

புலிகள் சமாதானத்துக்கு எதிரிகள் அல்லர். சமரசத்துக்கு - இணக்கத் தீர்வுக்கு - பகைவர்களும் அல்லர். போர்வெறியர்களும் அல்லர். இவற்றையும் தாண்டி, ஒரு விடயம் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. அந்தப் பதிவின் அடிப்படைகளும் காரணங்களும் கூட நியாயமானவைதான். அது இப்போது - களத்தில் அவர்கள் இல்லாத போதும் - மென்மேலும் உறுதியாகி, அவர்களின் நிலைப்பாடு முற்றிலும் சரியானதே என்பதைத் தெளிவுபடுத்தி வருவதுதான் இதில் உள்ள தீர்க்கதரிசனமான அம்சமாகும்.

தென்னிலங்கையும் அதன் பேரினவாத தலைவர்களும் நம்ப முடியாதவர்கள். எத்துணை நேர்மையானவர்களாக இருந்தாலும் - நீதியின்பாற்பாட்டுச் செயல்படுபவராக அமைந்தாலும் - பேரினவாத வெறி தென்னிலங்கையில் உணர்வெழுச்சியாகக் கிளப்பப்பட்டதும் அதற்குப் பணிந்து விடுவர் என்ற உண்மை புலிகளின் மனதில் ஆளப் பதிந்திருந்தது.

தென்னிலங்கையுடன் ஏதேனும் சமரச இணக்க ஏற்பாட்டுக்கு வந்தாலும், தமிழர் தரப்பின் ஆயுத பலம் இல்லாவிட்டால், அவற்றை எல்லாம் தென்னிலங்கைப் பேரினவாத சிங்களவர்கள் சுலபமாக மீளத் தட்டிப் பறித்து விடுவார்கள் என்ற நியாயமான சந்தேகம் புலிகளின் மனதில் ஆழப் பதிந்து இருந்தது. அது நிதர்சனமான உண்மையும் கூட.

அதனால்தான் தீர்வின் முழுமையான நடைமுறையாக்கத்திற்கு முன்னர் ஆயுதங்களைக் கைவிடோம் என்று புலிகள் அடம்பிடித்தார்கள்.

வழங்கிய அதிகாரப் பகிர்வுகளை மீளப் பறிக்க முடியாது என்பதை உறுதி செய்யும் சமஷ்டி ஆட்சி முறையாவது நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று புலிகள் ஒற்றைக் காலில் நின்றமை கூட அதனால்தான்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கும், அதன் கீழான ஆயுதக் கையளிப்புக்கும் புலிகள் முரண்பட்டு, குழம்பி நின்றமையின் பின்புலம் இதுதான்.

மாகாணங்களுக்கு வழங்கிய அதிகாரங்களை திரும்ப பிடுங்க முடியாது என்ற ஏற்பாடு இல்லாதவரை, ஒப்பந்த வாசகமே குப்பை கூடைக்குள் வீசப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றார் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம். அதுதான் இப்போது நம் கண்முன் நடந்து கொண்டிருக்கின்றது.

தமிழர்கள் தனியான தேசிய இனம் என்பதையும், இலங்கையின் வடக்கும் கிழக்கும் அவர்களின் பூர்வீகத் தாயகம் என்பதையும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொண்டுள்ளது.

அதேபோல 2002 ஒஸ்லோ கூட்டறிக்கை மூலம் சர்வதேச மட்ட மேசையில் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை இலங்கை ஒப்புக் கொண்டது.

ஆனால், இப்போது தமிழர்களின் ஆயுத வலிமை - பேரம் பேசும் பலம் - இல்லாத போது, முன்னர் இணங்கியவை எல்லாவற்றையும் மறுத்து, இணக்கம் கண்ட அடிப்படைகளை அப்படியே நிராகரித்து, புதிய நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது கொழும்பு.

தமிழர்களின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்களுடன் இணைந்து தீர்வு ஒன்றைக் காணத் தயார் என்று தமது நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மூலம் புலிகளுடன் சேர்ந்து ஒஸ்லோவில் கூட்டறிக்கை விட்ட ரணில் விக்கிரமசிங்க, இப்போது அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் மூலம் அங்கீகரிக்கப்பட்டு - சட்ட வலிமை பெற்ற - ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குக் கூட நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெற வேண்டும் எனப் புதுக்கதை விடுகிறார்.

இலங்கைத் தலைவர்களின் குத்துக்கரண அரசியலை நன்கு புரிந்து கொண்டையினால்தான், ஆயுத வலிமையோடும் பெரும் பலத்துடன் இருந்தபோது கூட, கொழும்புடன் இணக்கத் தீர்வு காண புலிகள் பின்னடித்தனர். இதுதான் உண்மை...!





# காரைதீவு பிரதேச செயலகத்தின் சித்திரை விளையாட்டு நிகழ்வுகள்

(வி.ரி.சகாதேவராஜா)

இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையில் காரைதீவு பிரதேச செயலகம் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா நடத்தியது.

காரைதீவுப் பிரதேச செயலாளர் சி. ஜெகராஜன் தலைமையில் காலை மரதன் ஓட்டம் கண்ணகையம்மன் கோவில் முன்றலில் ஆரம்பித்து வீரபத்திரர் ஆலய முன்றலில் நிறைவு பெற்றது. தொடர்ந்து கோலம் போடுதல், பன்னாங்கு பின்னுதல், குருத்தோலை பின்னுதல் போன்ற நிகழ்வுகள் நடந்தன.

மாலையில் பிரதான பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டார்.





# அஸ்வெசும தரவை இலத்திரனியல் மயப்படுத்த விசேட பயிற்சி!



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையாற்றும் அஸ்வெசும கள அதிகாரிகளுக்கு, அஸ்வெசும தரவை இலத்திரனியல் மூலம் இற்றைப்படுத்துவதற்கான விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சியானது மேலதிக அரச அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன் (காணி) தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட நலன்புரி நன்மைகள் பிரிவு உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இதன் சமூக பாதுகாப்பு நிபுணர் உப்புல் பிரமானகேயால் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

துல்லியமான தரவுகளையும், கணக்கெடுப்புக்களையும் உரிய நேரத்தில் இற்றைப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

கிழக்கு மாகாண நலன்புரி நன்மைகள் சபையின் மேலதிக ஆணையாளர் எஸ்.கிரிதரன், உதவிப் பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர், பதவி நிலை உதவியாளர் எம்.ரிழா எனப் பலர் கலந்து கொண்டனர்.







# சந்நிதியான் ஆச்சிரம ஏற்பாட்டில் மலையகத்தில் கல்விச் செயலமர்வு

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையகம் மூன்று நாள் கல்விச் செயலமர்வு நடத்தப்பட்டு வருகிறது.

மலையகம் பண்டாரவளை வலயத்துக்கு உட்பட்ட பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி, கிரேக் ஸ்ரீ சக்தி கல்லூரி ஆகிய பாடசாலைகளில் 175 மாணவர்களுக்கே தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான கல்விச் செயலமர்வு நடத்தப்படுகிறது.

நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகிய இந்தக் கல்விச் செயலமர்வு நாளை திங்கட்கிழமைவரை இடம்பெறவுள்ளது.

செயலமர்வைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணத்தின் பிரபலமான ஆசிரியர் குழாமினர் ஓய்வு பெற்ற ஆசிரியர் இரா. செல்வ வடிவேல் தலைமையில் இந்தச் செயலமர்வை நடத்தி வருகின்றனர்.

# கடலரிப்பை உடனே தடுங்கள் இல்லை இராஜினாமா செய்க!

## அம்பாறை மாவட்ட எம்.பிக்களிடம் யஹியாகான் பகிரங்க வேண்டுகோள்

(ஏ.எஸ்.மௌலானா)

ஜனாதிபதிக்கு கை கொடுப்பதை விடுத்து சாய்ந்தமருது உட்பட அம்பாறை மாவட்ட கடலோர மண்ணரிப்பை தடுக்க நிரந்தர திட்டமொன்றை செயற்படுத்துங்கள். இல்லையேல் பதவியை இராஜினாமாச் செய்யுங்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வெயிட்டுள்ள அறிக்கை ஒன்றில் யஹியாகான் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அதில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் – சாய்ந்தமருது பகுதி கடலரிப்பு உட்பட மாவட்ட கடலரிப்பு தொடர்பில் நான் உட்பட பலரும் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றோம். ஆனால் எதுவித நிரந்தர தீர்வும் இதுவரை எட்டப்படவே இல்லை.

தேசிய காங்கிரஸ் தலைவரும் அண்மையில் சாய்ந்தமருதில் கடலரிப்பை தடுத்து விட்டது போன்று வீடியோ, புகைப்படம் எடுத்து வெளியிட்டிருந்தார். ஆனால் அதுவும் தீர்வாக அமையவில்லை. அங்கும் இங்குமாக கல் போடுவது என்பது வெறும் கண்துடைப்பான செயற்பாடாகவே காணப்படுகிறது.

ஜனாதிபதியுடன் கைலாகு கொடுத்து அருகில் நின்று புகைப்படம் எடுக்கும் மாவட்ட எம்.பிக்கள் சாய்ந்தமருது கடலரிப்பை தடுக்க ஆர்வம் காட்டுவதில்லை. ஏன் என்ற கேள்வி மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளது. இவ்வாறு கைகொடுக்கும் சந்தர்ப்பத்திலாவது இந்தக் கடலரிப்பு குறித்து ஜனாதிபதியிடம் தெளிவாக பேசியிருக்க முடியும்.

அம்பாறை மாவட்ட எம்பிக்களே, ஜனாதிபதியை இவ்வாறு தனித்தனியாகச் சந்திப்பதை விடுத்துக் கட்சி ரீதியாக அல்லது மாவட்ட எம்பிக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மு.கா. தலைவர் ஹக்கீமுடன் சென்று சந்திக்க முடியுமாக இருந்தால் இன்னும் வலுவாக இருக்கும்.

தனித்தனியாகச் சென்று சந்திப்பதால்தான் சகல அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் இடைநடுவில் நிற்கின்றன என்பது மக்களின் ஆதங்கமாக இருக்கின்றது.

கடலரிப்புக் காரணமாக மீனவ சமூகம் மட்டுமன்றி முழு மக்களுமே மாவட்ட எம்.பிக்களுடன் கடும் ஆவேஷத்துடன் இருக்கின்றனர். இந்த எம்.பிக்களை தோற்கடிக்க வேண்டும் என்ற ஆத்திரம் மக்கள் மத்தியில் மேலோங்கி உள்ளது.

தயவுசெய்து சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பு உட்பட மாவட்ட கரையோர கடலரிப்பை தடுக்க நிரந்தர முயற்சி செய்யுங்கள். இல்லையேல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்யுங்கள்.

அரசில் அம்பாறை மாவட்ட எம்.பிக்களுக்கு இன்று நல்ல செல்வாக்கு உள்ளது என்று பரவலாக பேசப்படுகின்றது. அதைப் பயன்படுத்தியாவது தலைவர் ஹக்கீமின் தலைமையில் ஜனாதிபதியைச் சந்தித்துத் தீர்வைப் பெற முயற்சி செய்யுங்கள். –என்றுள்ளது.

# சிவனொளி பாத மலையில் விபத்து இரண்டு பெண்கள் ஆஸ்பத்திரியில்

(மஸ்கெலியா)

சிவனொளி பாத மலைக்குத் தரிசனம் செய்ய வந்து தரிசனம் செய்து விட்டு திரும்பிய வெளிநாட்டு உல்லாசப் பயணியின் வாகனத்தில் மோதுண்ட இரண்டு பெண்கள் மஸ்கெலியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என்று நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உல்லாசப் பயணிகள் சென்ற கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மது போதையில் வாகனம் செலுத்தியுள்ளாரா என்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு பெண்களில் ஒருவர் தற்போது கண்டி போதனா வைத்திய சாலைக்கு மாற்றம் செய்யபட்டுள்ளார்.

வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் 37 வயது, 40 வயதுடைய பெண்கள். இவர்கள் இருவரும் வீதி ஓரத்தில் நின்று கொண்டு இருந்த வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதி வேகமாக வந்த கார் மோதியதால் ஒரு பெண்ணின் கால் முறிந்துள்ளது.

மற்றைய பெண் சிறு காயங்களுக்கு ஆளாகியுள்ளார்.



# பசுமையான எதிர்காலத்தை கட்டியெழுப்பும் திட்டத்தில் நாடளாவிய ரீதியில் மரம்நடுகை!

## அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியம் நடவடிக்கை

(தில்சாத் பர்வீஸ் )

"பசுமையான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதனூடாக மாசற்ற சுதந்திரக் காற்றை சுவாசிப்போம்" எனும் தொனிப் பொருளின் கீழ் நாடளாவிய ரீதியில் மரக்கன்றுகள் நடும் வேலைத் திட்டம் 5 ஆவது முறையாக எஸ்.எல்.எம்.கியூ. நிறுவனத்தின் அனுசரணையுடன் அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மரக்கன்று நடுகை சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளம்கலை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டின் கீழ் சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் மஹ்சூம் செய்யத் அஹமட் தலைமையில் அண்மையில் ஏறாவூர் அல் அஷ்ரப் வித்தியாலயம், மிச்நகர் இல்மா வித்தியாலயம், அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஏறாவூர் ஹதுன் நஜ்மில் உலூம் அரபிக் கல்லூரி போன்ற இடங்களில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளின் அதிதிகளாக சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளம்கலை பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் முஹம்மட் றிக்காஸ், ஏறாவூர் ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.எல்.ஸாஜித் ஹுஸைன், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் முஹம்மட் ரம்ஸி, அல் அஷ்ரப் வித்தியாலய அதிபர் முஹம்மட் இஸ்ஸத், மிச்நகர் இல்மா வித்தியாலய அதிபர் முஹாஜிர், அல்



அஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் அல்ஹாஜ் எஸ்.எம்.எம்.நவாஸ், மஃஹதுன் நஜ்மில் உலூம் அரபிக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்ஹ் எம்.பி.எம். இஸ்ஸத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் நஜாத், பொருளாளர் இம்தாத், உப பொருளாளர் அயாஸ், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான மசூத், பாத்திமா ஸஹானா, நிகழ்ச்சி செயற்றிட்ட பொறுப்பாளர் பாத்திமா தியானா, இன்ஸமாம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# வியாபாரத்துக்கான முதலீடாக மாறிய காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்!

## தீர்வுகளை எட்டமுடியாதிருக்க இதுவே காரணம் என்கிறார் ஈ.பி.டி.பியின்ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன்

வியாபாரத்துக்கான முதலீடாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மாற்றப்பட்டமையே தீர்வுகளை எட்ட முடியாதிருக்க காரணம்.

இவ்வாறு ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று (28) ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்த சிறீரங்கேஸ்வரன் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தற்போது ஒரு சிலரது சுயநலத்துக்காகச் சர்வதேசத்தை நோக்கிய வியாபாரமாக ஆக்கப்பட்டுள்ளது. உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் உறவுகள் அவலங்களுடனும் ஏக்கத்துடன் இன்றும் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது நாட்டைப் பொறுத்தளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் என்பது பெரும் பேசு பொருளான ஒரு விடயமாக உள்ளது.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகளுக்கு நீதியும் பரிகாரமும் கிடைக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், பாதிக்கப்பட்ட உறவுகள் அதை நோக்கிச் சரியாக தமது கோரிக்கைகளை முன்னெடுத்திருந்த போதிலும் ஒரு சில சுயநல அரசியல்வாதிகள்



தமது தேவைகளுக்காக அந்த உறவுகளின் உணர்வுகளை வியாபாரமாக்கி விட்டுள்ளதன் வெளிப்பாடே இதுவரை எந்தவொரு தீர்வையும் எட்ட முடியாதிருக்கின்றது.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சிறிதளவேனும் முன்னேற்றம் ஏற்படவில்லை என தெரிவித்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் 1983 ஆம் ஆண்டிலிருந்து 2009 வரையான காலப் பகுதிக்குள் காணாமல் அக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு உண்மையாகவே பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் இருந்து எத்தகைய ஆதரவு அல்லது ஒத்துழைப்புகள் கிடைத்திருக்கின்றது என்பதே இங்கு பார்க்கப்பட வேண்டிய முக்கிய விடயமாக உள்ளது.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நியாயம் கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினாகிய நாம் 1995 களில் அதாவது சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட காலப் பகுதியில், பல்வேறு அழுத்தங்கள் இருந்தபோதிலும் அவற்றை உடைத்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பாதுகாவலர் சங்கத்தை அமைத்து உறவுகளை மீட்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களது பெற்றோர்கள் இன்றும் தமது பிள்ளைகள் வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் போராட்டங்களையும் கோரிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். அது அவர்களது உணர்வுடன் கூடிய விடயம்.

ஆனால், அதைக் கொச்சைப்படுத்தும் வகையில் ஏற்பாட்டுக் குழு அல்லது சங்கம் என்று கூறி அவர்களது கட்டமைப்புக்குள் உள்நுழைந்த சுயநல அரசியல் குழுவினர் அவர்களது வலிகளையும் வேதனைகளையும் தமக்கான அரசியல் வியாபாரத்தின் முதலீடாக்கி வருமானம் ஈட்டும் ஒரு மையப்பொருளாக அந்த போராட்டத்தை திசை வழிமாறச் செய்துவிட்டனர்.

அந்த வகையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகளது உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் சுயநலன்களையும் அரசியல் இலாபங்களையும் குறித்த தரப்பினர் கைவிட்டு தீர்வுகளையும் பரிகாரத்தையும் தேடிகொள்ளும் வகையில் அந்த உறவுகளுக்கு ஒத்துழைப்பது அவ சியம்.- என்றார்.

# கல்விக்கு இடையூறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(மஸ்கெலியா )


கல்வி நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்துத் தன்னையும் தனது சகோதரியையும் தாக்கிய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மஸ்கெலிய மறே தோட்டத்தில் க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவி மற்றும் உயர் தர பிரிவில் கல்வி பயின்று வரும் தனது அக்கா இருவரும் கடந்த 22 ஆம் திகதி தனது வீட்டில் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை, அதே பகுதியில் வசிக்கும் சில நபர்கள் சத்தம் இட்டு கல்வி நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்துள்ளனர். இதனால் அதனை தட்டி கேட்டுள்ளனர்.

இதன் காரணமாக கோபம் அடைந்த குறித்த நபர்கள் இரண்டு மாணவிகளையும் தகாத வார்த்தைகளால் பேசி தாக்கியுள்ளனர்.அன்றைய தினம் நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்து விட்டு மஸ்கெலிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஆனால் இன்றுவரை குறித்த நபர்கள் சம்பந்தமாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை என்று பாதிக்கப்பட்ட இரு மாணவிகளும் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

ஒரு மாணவி எதிர்வரும் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ளமை காரணமாக தனது அன்றாட கல்வி நடவடிக்கைகளை தொடர வேண்டிய நிலையில் குறித்த நபர்களால் தனது கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தும் பாதிக்கக்கூடும் என்று கவலை தெரிவித்துள்ளார். எனவே இது குறித்து நல்லதண்ணி பொலிஸார் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்



# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரா? நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரின் பொது அணியா?

## தடுமாற்றம் ஏன் இந்தச் சமயத்தில்?


இந்திய நலன்களை முன்னிறுத்திச் செயல்படும் சிவசேனை மறவன்புலவு சச்சிதானந்தம் மற்றும் ஏனைய இந்திய முகவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட 'எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்' என்ற கோரிக்கை இப்போது பல தளங்களிலும் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் 'தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதால் தமிழினத்துக்கு நன்மை விளையுமா?', 'இந்த அரசியல் சதுரங்கத்தில் தமிழர் தரப்பு தம்மை வலுப்படுத்துவதற்கு எவ்வாறு காய் நகர்த்த வேண்டும்?' என்று ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

முதலில் கடந்த காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடும் போது என்ன நடந்தது என்பதை ஆராய்வோம்.

### வரலாறு

இலங்கையின் அரசமைப்பு 1978 ஆம் ஆண்டு மாற்றப்பட்டு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் 1982 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம் 'தமிழர் தேசம் ஒரு தனி தேசம்' என்ற கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டார். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரான அமிர்தலிங்கத்திடம் இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினாவியபோது 'கூட்டணி இது போன்ற மலிவான உத்திகளை பயன்படுத்தாது' என்றும் அதே நேரம் 'ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும்' என்றும் கோரி இருந்தார். அப்போது இடதுசாரி தமிழ் கட்சிகளால் 'ஜே.ஆருக்கு எதிரான தமிழ் வாக்குகளை திசை திருப்புவதற்காக குமார் போட்டியிடுகிறார்' என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு இருந்தது. இறுதியாக குமார் 173,934 வாக்குகளை அதாவது மொத்த வாக்குகளில் (2.67%) வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் 40.03% (87,263) வாக்குகளைப் பெற்று முன்னிலையில் இருந்தார்.

இரண்டாவதாக, சிவாஜிலிங்கம் ரெலோ மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து ராஜினாமா செய்த பின்னர், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற 8 ஆவது ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு 0.09 வீத (12,256) வாக்குகளையே பெறமுடிந்தது.



Dr.முரளி
வல்லிபுரநாதன்

மேற்படி இரண்டு தேர்தல் முடிவுகளையும் எடுத்து நோக்கினால் 1977 இனக்கலவரத்தின் பின்னர் தமிழர் மத்தியில் விடுதலை உணர்வுகள் உச்சத்தில் இருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற இலங்கையின் முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் –கூட்டணியின் பகிஷ்கரிப்புக் கோரிக்கைக்கு மத்தியிலும் – யாழ். மாவட்ட மக்கள் குமாருக்கு வாக்களித்துத் தனித்தேசம் குறித்த தமது விருப்பினை வெளிப்படுத்தியிருந்தனர். இருப்பினும் முக்கியமாக வடக்கு, கிழக்கிற்கு வெளியே தமிழர்களின் ஆதரவை அவர் பெற முடியவில்லை .

ஆனால் 2019 இல் இடம்பெற்ற எட்டாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளராகத் தம்மை முன்னிறுத்தி சிவாஜிலிங்கம் போட்டியிட்டபோது அவர் முற்றாக அனைத்துப் பிரதேசத் தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்ட அதேவேளையில், ராஜபக்ஷர்களுக்கு எதிரான தமிழர்களின் வெறுப்பு அலையானது வடக்கு, கிழக்கு மலையகம் எங்கும் சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவாக வெளிப்பட்டு, அந்தப் பிரதேசங்களில் மாத்திரம் சஜித் வெற்றி பெற்று இருந்தார்.

குறித்த காலகட்டத்தில் 'திண்ணைவேலியில் உள்ள பிரபல உல்லாச விடுதியில் ராஜபக்ஷர்களும் சிவாஜிலிங்கமும் இரகசியமாக சந்தித்த பின்னரே சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தார்' எனச் சந்தேகங்கள் எழுந்திருந்தன. அவற்றை உறுதிப்படுத்துவது போல, ராஜபக்ஷர்களுக்கு ஆதரவான சிங்கள மொழி ஊடகங்கள் சிவாஜிலிங்கத்தின் தமிழ் இனவாத நேர்காணல்களை மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்டு சிங்கள வாக்காளர் மத்தியில் சிங்கள இனவாதத்தைத் தூண்டி ராஜபக்ஷர்களின் வெற்றியை உறுதி செய்து இருந்தன.

### தமிழ்ப் பொது வேட்பாளர்

2019 இடம்பெற்ற எட்டாவது ஜனாதிபதித் தேர்தலிலேயே 'தமிழர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு எதையும் சாதிக்க முடியாது' என்பதைத் தமிழ் வாக்காளர்கள் உணர்ந்து விட்ட நிலையில், இப்போது தமிழர்களுக்குத் தனியான தேசத்தைப் பெறுவதற்குரிய சாத்தியங்கள் மேலும் அருகியுள்ள நிலையில், இந்திய முகவர்கள் ஏன் தமிழ்ப் பொது வேட்பாளர்களைப் பற்றிப் பேசுகிறார்கள்? என்பதை

தொடர்ச்சி▼



# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரா? நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரின் பொது அணியா?

தொடர்ச்சி▲

அறிந்துகொள்ளத் தொடர்ச்சியாக இலங்கையில் இந்தியாவினால் மேற்கொள்ளப்படும் தந்திரங்கள் என்ன என்பதைத் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினால் தமிழ் வாக்குகள் பிரிக்கப்படும். அப்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளுடன் பதவிக்கு வரும் நிலையில் கொழும்பில் உள்ள ஆட்சியாளர்களுக்கும் தமிழருக்கும் உள்ள இடைவெளி அதிகரிக்கும்.

அதாவது சிங்கள ஆட்சியாளர்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள இடைவெளியை பயன்படுத்திக் கொண்டு இலங்கைக்குள் பின்கதவால் உள்நுழைவதே இந்திரா காந்தி காலத்தில் இருந்து இந்திய வல்லரசு, அந்த நாட்டின் உளவு அமைப்பு மற்றும் தற்போதைய மோடி அரசு வரையில் பிரதான தந்திரோபாயத் திட்டமாக இருக்கிறது.

இலங்கையில் தமிழ்த் தலைமைகள் ஒன்றுபடுவதைத் தடுத்து அவர்களை பலவீனமான பொம்மலாட்டப் பொம்மைகளாக வைத்திருப்பதன் மூலம் ஈழத்தமிழரின் தேசிய உணர்வுகளை மழுங்கடித்து இந்திய சார்பு நிலையைத் தோற்றுவிப்பது இரண்டாவது திட்டமாக இருக்கிறது. இந்த உபாயத்தைப் பல ஈழப் போராளி இயக்கங்களை இந்தி(ரா)யா தனது மண்ணில் உருவாக்கிப் பயிற்சியளித்து மோதவிட்ட காலத்தில் இருந்து இன்றைய தமிழரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தலில் இந்திய முகவர்களது தலையீடு வரை தொடர்ச்சியாக அவதானிக்கலாம்.

இலங்கையில் தமிழருக்கு 13 ஆவது திருத்தத்துக்கு மேற்பட்ட ஒரு கௌரவமான தீர்வோ அல்லது நிலையான சமாதானமோ ஏற்படக் கூடாது என்பதே இந்தியப் பிராந்திய வல்லரசின் மூன்றாவது திட்டமாக இருக்கிறது. இதன் காரணமாகவே 2009 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் ‘சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்கவேண்டும்’ என்று வலியுறுத்தி இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தை மேலை நாடுகள் கொண்டு வந்த போது, இந்தியா தலையிட்டு அதனை இலங்கையில் தமிழ் மக்களைப் ‘பயங்கரவாதிகளிடமிருந்து’ விடுவித்தமைக்குப் பாராட்டும் தீர்மானமாக மாற்றியது. இந்தியாவின் இந்தச் சூழ்ச்சியினால் வன்னியில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் இரண்டு வருடங்கள் தமிழர்கள் பல வந்தமாகத் தடுத்து வைக்கப்படும் நிலை உருவானது.

மேலே குறிப்பிட்ட உபாயங்களை இலங்கையில் மாத்திரமல்லாமல் இந்தியா தனது அண்டை நாடுகளான வங்கதேசம் (பங்களாதேஷ்), பாகிஸ்தான் மற்றும் மாலைத்தீவுகள் அனைவற்றிலும் கடைபிடித்துப் பிராந்தியத்தில் தன்னை ஒரு வல்லரசாக நிலைநாட்ட முயல்வதைப் பிராந்தியமானது பிரித்தானியாவில் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னரான காலப்பகுதியின் வரலாற்றை ஆராய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

எனவே தமிழ் மக்களும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நேர்மையாகப் போராடுபவர்களும் இந்தியாவின் இந்த நயவஞ்சக வலைக்குள் வீழ்ந்து விடாது, தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கான எந்த ஒரு நகர்வினையும் முற்றாக நிராகரிக்க வேண்டும்.

**எது சாத்தியம்?**

இலங்கையில் தலைவிரித்தாடும் ஊழல் மற்றும் மோசடிகள் நாட்டில் வாழும் அனைத்து இனத்தவர்களையும் பாதித்துக் கொண்டிருக்கும் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்டுள்ள நிலையில், தமிழர்களே அதிகளவு வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ள தருணத்தில், ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் வகையில், ஈழத்தமிழர்கள் தமது வாக்குகளைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தி இந்த அரசியல் சதுரங்கத்தில் பொது எதிரிகளை முதலில் தோற்கடிக்க வேண்டும்.

தென்னிலங்கையின் தற்போதைய அரசியல் கள நிலைவரத்தின்படி, முதன்மைக் கட்சிகளும் முதன்மை வேட்பாளர்களும் சமபலத்துடன் காணப்படுகின்றனர். ஒரு தென்பகுதிக் கட்சியோ தலைவரோ அறுதிப் பெரும்பான்மையின வாக்குகளை மட்டும் பெற்று அடைய முடியாத சூழல். இம்முறை எவர் ஜனாதிபதியாக வருவார் என்பது சிறுபான்மையினர் கைகளிலேயே உள்ளது எனப் பெரும்பான்மையின மக்களே வெளிப்படையாகக் கூறும் நிலை. இவ்வாறு தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழர்கள் மாறக்கூடிய தந்திரோபாயத் தருணத்தில், தென்பகுதியில் இளைஞர்களின் ஆதரவுடன் சுயமாக உறுதியாக முடிவு எடுக்கக்கூடிய தலைவராக முன்னிலை பெறும் ஒருவருக்கு வாக்களிப்பதன் ஊடாக ஓர் ஆட்சி மாற்றத்தை தமிழர்களால் ஏற்படுத்த முடியும்.

ராஜபக்ஷர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிவாஜிலிங்கத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற்ற நிலையில், இம்முறையும் ராஜபக்ஷர்களின் ஆதரவுடன் போட்டியிடும் தென்பகுதி ஜனாதிபதி வேட்பாளர் மறைமுகமாகத் தமிழ்ப் பொது வேட்பாளரை ஊக்குவித்துத் தென்பகுதியில் சிங்கள இனவாத

தொடர்ச்சி▼




# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரா? நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரின் பொது அணியா?

தொடர்ச்சி▲

வாக்குகளைப் பெறவே எத்தனிப்பார். அதேபோல, பிராந்திய வல்லாதிக்கமும் இலங்கையில் தமிழர்கள் தீர்மானகரமான சக்தியாக மேலெழுவதைத் தடுக்கத் தன்னாலான அனைத்தையும் செய்யும்.

### தமிழர் பொது அணி

அடுத்ததாக நாடாளுமன்றத் தேர்தலில், விகிதாசார முறைத் தேர்வு முறைமையின் கீழ் அதிக அளவு தமிழர்கள் நாடாளுமன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்றால், அனைவரும் இணைந்து தமிழர்களின் பொது அணி ஒன்றை உருவாக்கி அந்த அணியின் கீழ் போட்டியிட வேண்டும்.

ஜே.வி.பியோ அல்லது சஜித் அணியினரோ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழர்களின் உரிமைகளைத் தாம்பாளத்தில் வைத்துத் தரப் போவதில்லை. மாறாக சிங்களத்தின் வாக்குகள் முக்கூறாகப் பிரியக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படும் களநிலவரத்தில், சரியான தந்திரோபாயத் திட்டமிடல் ஊடாக இலங்கையின் அடுத்த நாடாளுமன்றில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செல்வாக்கினை அதிகரிக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பம் தற்போது கைகூடியுள்ளது. சின்னாபின்னப்பட்டுச் சிதறி நிற்கும் ஒட்டுக்குழுக்களாகச் செயல்படாத தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஈழத்தமிழரின் நலன்களுக்காகத் தமது சுயநலன்களை தியாகம் செய்து ஒன்றுபட்டால் கூட்டாட்சித் தீர்வினை அல்லது குறைந்த பட்சம் 13 ஆவது திருத்தத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை வேண்டிப் பெற முடியும்.

மேலும் பொதுவான தமிழர் அணி ஒன்றை உருவாக்க ஆதரவளிக்காத அரசியல்வாதிகள், ஜனாதிபதித் தேர்தல் வரும்போது மட்டும் குதித்தெழுந்து பொது வேட்பாளர் பற்றி பேசும் போது, அவர்களுடைய வேடம் கலைந்து யாருடைய நலன்களுக்காக இந்தக் கோரிக்கையை முன் வைக்கிறார்கள் என்பது பரகசியமாகிறது.

மோடியின் அரசாங்கம் நாள்தோறும் இலங்கைக் கடலில் பல மில்லியன் பெறுமதியான மீன்களை இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக அள்ளிச்செல்ல ஊக்குவித்து வருவதோடு, சுரண்டலை மேலும் அதிகரிப்பதற்கு மண்டைதீவில் பல மில்லியன் பெறுமதியான கடல்வள ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க முன்வருகிறது. மறுபுறம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைத்து இலங்கையின் வளங்களை உறிஞ்சி எடுப்பதற்கு கங்கணம் கட்டிச் செயல்படுகிறது.

மோடியின் நெருங்கிய சகாவும் வியாபாரியுமான அதானி மன்னார் உட்பட வடக்கின் பல பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளுக்கு அண்மையில் காற்றாலைகளை அமைத்து, இயற்கைச் சமநிலையைக் குலைத்துத் தமிழர்களை அவர்களது வரலாற்று வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றி, அப்பகுதிகளில் நிறைவாக உள்ள இல்மனைட் உள்ளிட்ட கனிய வளங்களையும் சுரண்டுவதற்கு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றார். அதே தருணத்தில், இலங்கைத் துறைமுகங்களைத் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முயலும் இந்தியா இப்போது மத்தள விமான நிலையத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### செய்ய வேண்டியது என்ன?

இவ்வாறாக இந்தியாவின் சூழ்ச்சிவலை இலங்கையை சுற்றி இறுகிக் கொண்டு வரும் களப்புறச் சூழ்நிலையில் ஈழத் தமிழர்கள் 'மத்தியில் ஆட்சி மாற்றம் மாகாணங்களில் தமிழர் பொது அணி' என்ற திட்டத்துடன் காய்களை நகர்த்தித் தம்மைப் பலப்படுத்த வேண்டும்.

இந்தியாவின் கைக்கூலிகளாகப் பல தமிழ் அரசியல்வாதிகள் மாற்றப்பட்டு மௌனமாக்கப்பட்டும், பிரதான அரசியற் கட்சி உட்கட்சிப் பிளவினால் செயலிழக்க வைக்கப்பட்டும் உள்ள கையறு நிலையில் இன மீட்சிக்காகத் தமிழ் புத்திஜீவிகளும் தேசிய சிந்தனையாளர்களும் தமது கருத்துக்களை துணிவுடன் வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

போர்க்கால அழிவுகள் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் வறுமைக் கோட்டிற்கு கீழ் தள்ளப்பட்ட பெருமளவு தமிழர்கள் வன்னி, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மலையகம் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என அடையாளம் காணப்பட்டவர்கள் மற்றும் இலங்கை நீதிமன்றத்தில் பொருளாதாரக் குற்றம் இழைத்தவர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் ஆகிய இரு தரப்பினர் மீதும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

முழுமையான ஒரு ஆட்சி மாற்றத்தின் மூலமே இந்தக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அதே வேளை நாடாளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரித்து ஒன்றுபட்ட குரலில் பிராந்திய சுயாட்சியைப் பெற ஈழத் தமிழர்கள் முயல வேண்டும்.

# குழந்தைக் கவிஞர் அம்பி இன்று சிட்னியில் இயற்கை எய்தினார்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஈழத்து சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் கவிஞர் அம்பியின் காத்திரமான படைப்புகள் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். அவரின் மறைவின் பின்னரும், அவருடைய படைப்புக்கள் குழந்தைகளின் நாக்கினில் தவழும். தமிழ் கூறும் நல்லுலகால் ஈழத்தின் தேசிய விநாயகம் என்றும் குழந்தை கவிஞன் என்று போற்றப்படும் கவிஞர் அம்பி எனப்படும் இராமலிங்கம் அம்பிகை பாகன் தனது 94 வயதில் இன்று (28.4.24)இயற்கை எய்தினார்.

### யாழ். பரியோவான் மாணவன் கவிஞர் அம்பி

சிறுவர் இலக்கிய படைப்புக்களை தாயகத்தில் மாத்திரமின்றி புலம்பெயர் மண்ணிலும் படைத்த ஈழத்தைச் சேர்ந்த அம்பி என்று அழைக்கப்படும் இராம லிங்கம் அம்பிகைபாகர் அவர்கள் சிறுவர் இலக்கிய வரலாற்றில் காத்திர மான பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

எளிமையும் தமிழின் அழகும் ஒருங்கே கூடியமையும் அவர் பாடல்கள் பல குழந்தைகளின் நாவில் இன்றும் தவழ்கின்றன. தமிழ் மொழி வளர்ப்பு, கவிதை என்று பல தளங்களில் சாதனைகள் செய்தவர் கவிஞர் அம்பி.

இராமலிங்கம் அம்பிகைபாகர் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் அம்பிக்கு இலங்கையில் வடக்கே நாவற்குழி சொந்த ஊராகும். தனது ஆரம்பக் கல்வியை நாவற்குழி சி. எம்.எஸ். பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர் அறிவியல் மற்றும் கணித ஆசிரியராக இலங்கையில் பல பாகங்களிலும் பணியாற்றியுள்ளார்.

ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவரான கவிஞர் அம்பி, ஆஸ்திரேலியாவில் தன் முதுமையிலும் தமிழுக்கு ஆற்றிய பணியை எவரும் மறவர்.

அம்பி அவர்கள் அவுஸ்திரேலிய தமிழ் சமூகத்துக்கு செய்த பங்களிப்பு மிகப் பெரிது.

### கவிஞர் அம்பியும் சிறுவர் இலக்கியமும்

குழந்தைக் கவிஞன் என்றும் ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளை என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பி 1950 ஆம் ஆண்டு முதல் எழுதி வருபவர். கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அறியப்பட்டவர்.

கங்காரு தேசத்தின் சிட்னியில் தற்போது வசிக்கும் கவிஞர் அம்பி சிறுவர் இலக்கியத்துக்குக் குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சிறார்களுக்காக கவிதைகள் பலவற்றையும் படைத்துள்ளார்.

இலட்சியக் கோடி என்ற சிறுகதையின் மூலம் தமிழ் எழுத்துலகில் அறிமுகமானவர். இந்தச் சிறுகதை தினகரன் இதழில் வெளிவந்தது. அத்துடன் தமிழ் நாட்டில் அண்ணாதுரை முதலமைச்சராக இருந்த காலப் பகுதியில் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற பெருமைக்கு உரியவர். சிறுவர் இலக்கியத்துக்கு பெரும் பங்காற்றிய அம்பியை ஈழத்தின் தேசிக விநாயகம் பிள்ளையாக சுபமங்களா இதழால் வர்ணிக்கப்பட்டவர்.



எளிமையும் தமிழின் அழகும் ஒருங்கே கூடியமையும் அவர் பாடல்கள் பல குழந்தைகளின் நாவில் இன்றும் தவழ்கின்றன. அம்பியின் கவிதைகள் நூலிலும் பல இதழ்கள், இணையத் தளங்களிலும் வெளியாகி பிரசித்தி பெற்றுள்ளன.

புலம்பெயர் மண்ணிலும் பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பியின் படைப்பியல் வரலாறு காலங்காலமாக நிலைத்திருக்கும்.



# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொதுச் சந்தை மட்டு. ஜெயந்திபுரத்தில்

(பழுவூரான்)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிபோம்; சத்துணவு தரும் ஆரோக்கியத்தை வளர்த்தெடுப்போம் எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனம் சமாதான நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் பொதுச் சந்தை ஜெயந்திபுர பகுதியில் நேற்று சனிக்கிழமை (27) இடம்பெற்றது.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவன இயக்குனர் அருட்பணி ஜய நிக்சன் அடிகளார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக இயேசு சபை மேலாளர் அருட்பணி சகாயநாதன் அடிகளாரும், கௌரவ அதியாக சிறிய குரு மட இயக்குநர் அருட்பணி யேசுதாசன் அடிகளார் மற்றும் சர்வ மத தலைவர்கள் , விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாய பயிற்சி நிலைய உத்தியோகத்தர்கள் , விவசாய போதனாசிரியர் , மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவன உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனம் சமாதான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமூக மட்ட மக்களிடையே நடைமுறைப்படுத்தும் பொதுச் சந்தை கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது.

சிறுதொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்கள் இங்கு விற்பனை செய்யப்பட்டன.






# வெப்ப சமநிலையை ஏற்படுத்த கண்டல் தாவரங்கள் நடுகை!

**(எச். எம். ஹலால்தீன், ஹஸ்பர் ஏ.எச்.)**

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட உப்பாறு, பைசல் நகர் போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாக அர் ரௌலா இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் எச்.எஸ்.பி.சி. மற்றும் பிரைன் டினா நிறுவனங்களத அனுசரணையுடன் கண்டல் தாவரங்கள் நடும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச. முஹம்மது கனி தலைமையில் இடம்பெற்றது.

அதிகரித்துவரும் உலக வெப்ப நிலைக்கு வெப்பச் சமநிலையை ஏற்படுத்துவதற்காகவும் இந்தப் பகுதிகளில் சுற்றுச்சூழலை அழகு படுத்துவதற்காகவும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகளை கவரக் கூடிய வகையிலும் இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

இதன் போது கிண்ணியா நகர சபையின் செயலாளர் எம் அனிஷ், கிண்ணியா பிரதேச செயலகத்தின் உள்ளக கணக்காய்வு அபிவிருத்தி உத்தியோகத்தர, கிண்ணியா பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை உத்தியோகத்



தர், கிண்ணியா பிரதேசத்துக்ஒகான இளைஞர் சம மேளனத்தின் தலைவர் உட்பட அர் ரௌலா இளைஞர் கழக உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு - வவுணதீவில் வாழ்வாதார உதவி வழங்கல்




**(பழுவூரான்)**

அக்‌ஷன் யுனிற் லங்கா நிறுவனத் தின் செயற்றிட்டத்தின் கீழ், கால் நடை வளர்ப்புக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (26) வவுணதீவில் இடம்பெற்றது.

மண்முனை மேற்குப் பிரதேச செய லாளர் திருமதி சத்தியானந்தி நமசி வாயம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சுய தொழில் முயற்சியா ளர்களை இனங்கண்டு அவர்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய செயற்றிட்டமாக ஒரு குடும்பத்துக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியில், 21 குடும்பங்களுக்கும் 15 லட்சத்து 78 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் இதன்போது கையளிக்கப்பட்டன.

இதன் போது வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 21 குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்துக்குத் தலா மூன்று ஆடுகள் வீதம் மொத்தம் 63 ஆடுகள் வழங்கப் பட்டுள்ளன. இந்த நிகழ்வில் மட்டக் களப்பு அக் ஷன் யுனிற் லங்கா நிறுவ னத்தின் பிர தம நிறைவேற்று அதிகாரி கே.கஜேந் திரன், பிரதேச செயலகம் மற்றும் அக் ஷன் யுனிற் லங்கா நிறுவனம் என்ப வற்றின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# இராகலை கிருஷ்ணன் மாதிரி பாடசாலையில் பரிசளிப்பு விழா

(ஆ.ரமேஸ்)

வலப்பனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட இராகலை கிருஷ்ணன் மாதிரி பாடசாலையில் 2023 ஆம் ஆண்டு தரம் ஐந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா இராகலை ஜெமினி வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் (26) பாடசாலை அதிபர் ஆர். விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வலப்பனை கல்வி பணிப்பாளர் டி.எம். பி.திஸாநாயக்கக கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக மத்திய மாகாண முன்னால் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருந்ததி சத்தியேந்திரா, மற்றும் மத்திய மாகாணத்தின் ஆரம்பப் பிரிவு உதவி கல்வி பணிப்பளர் வீ.அமுதவல்லி, முன்னாள் வலய கல்வி பணிப்பாளர் பி.பி நவரத்தின, வலப்பனை – ஹங்குராங்கெத்த கோட்டக்க கல்வி பணிபாளர்களான வீ.யோகராஜ், எஸ். கே.ராஜலிங்கம், வலப்பனை கல்வி வலயத்தின் ஆரம்ப உதவி கல்வி பணிப்பாளர் கே.யசோதரன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுடன் பிரதேச அரச அதிகாரிகள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்குப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பணிப்பாளர்கள், ஆசிரியர்கள் என பலரும் கௌரவிக்கப்பட்டனர்.











# தென்னிந்திய மாநிலங்களில் தண்ணீர் தட்டுப்பாடு அபாயம்

ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய தென்னிந்திய மாநிலங்களில் உள்ள நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவில் 17 சதவீதம் மட்டுமே நீர் மிச்சம் இருப்பதால் 10 ஆண்டுகள் காணாத தண்ணீர் பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளதாக மத்திய நீர் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மத்திய நீர் ஆணையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களை மத்திய நீர் ஆணையம் கண் காணித்து வருகிறது. இவற்றில் தென்னிந்தியாவில் உள்ள 42 நீர்த்தேக்கங்களின் சராசரி நீர் கொள்ளளவு 53.334 பில்லியன் கன மீற்றர் ஆகும். சமீபத்திய ஆய்வின்படி மேற் குறிப்பிட்ட நீர்த்தேக்கங்களில்தற்போது 8.865 பில்லியன் கன மீற்றர் அளவுக்கான தண்ணீர் மட்டுமே காணப்படுகிறது. இது நீர்த்தேக்கத்தின் கொள்ளளவில் 17 சதவீதமாகும்.

கடந்த பத்தாண்டுகளாகத் தென்னிந்திய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவில் 23 சதவீத தண்ணீர் இருந்து வந்தது. அதிலும் கடந்த 2023 ஆம் ஆண்டில் 29 சதவீத தண்ணீர் இருப்பு இருந்தது.

இந்த நிலையில், தற்போது 17 சதவீதம் மட்டுமே தென்னிந்திய நீர்த்தேக்கங்களில் தண்ணீர் மிச்சம் உள்ளதால் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு, வேளாண்மை நீர்ப்பாசன தட்டுப்பாடு மற்றும் நீர் மின் உற்பத்தியில் பின்னடைவு உள்ளிட்டவை ஏற்படும் அபாயம் உள்ளது.

இதற்கு முக்கிய காரணம், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நடப்பாண்டில் போதிய அளவு மழை பொழியவில்லை. இதே போன்று மகாநதி மற்றும் பெண்ணாறு படுகைகளுக்கு இடையே கிழக்கு நோக்கிப் பாயும் நதிகளிலும் நீர் வரத்து மிகக் குறைவாக உள்ளது.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சென்னையில் சுட்டெரிக்கும் வெயில்: தொழிலாளர்கள் வெப்ப அலையால் அவதி

கோடைகாலம் தொடங்கியதில் இருந்து சென்னையில் நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து கொண்டே வருகிறது. வெயில் உக்கிரமாக இருக்கும் அக்னி நட்சத்திரம் காலம் மே 4 ஆம் திகதி தொடங்க உள்ள நிலையில், அதற்கு முன்பே சென்னை மாநகரில் வெயில் சுட்டெரித்து வருகிறது.

சென்னை மீனம்பாக்கத்தில் 101 டிகிரி ஃபாரன் ஹீட் வெயில் பதிவாகிறது. வெயிலுக்கு அஞ்சி பொதுமக்கள் பகலில் வெளியில் வருவதை தவிர்த்து விடுகின்றனர். பணி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வெளியில் வர வேண்டிய கட்டாயத்தில் இருப்போர், கடும் வெயிலின் தாக்கத்தால் உடலில் நீர் இழப்பு, சோர்வு, தலைச் சுற்றல், மயக்கம் போன்ற பல்வேறு உடல் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். கடும் வெப்பத்தால், வெப்ப வாதம் ஏற்பட்டு மரணத்தை கூட விளைவிக்கலாம் என தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் எச்சரித்துள்ளது.

இதற்கிடையே தமிழகத்தில் நாளை மறுதினம் வரை வெப்ப அலை வீசும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்து இருப்பது பொது மக்கள் மத்தியில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் மக்கள் தங்களை வெப்ப அலையில் இருந்து பாதுகாத்துக் கொள்ள மத்திய சுகாதார அமைச்சகம் வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

அதில், “வெப்பம் அதிகமாக இருக்கும் பகல் 12 மணி முதல் 3 மணி வரை மக்கள் வெளியே வர வேண்டாம். நீரிழப்பு ஏற்படாமல் இருக்க போதுமான அளவு நீரை பருக வேண்டும்” என அறிவுறுத்தியுள்ளது.

எனினும், கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் உழைத்தால் மட்டுமே வீட்டில் அடுப்பெரியும் என்ற நிலையில் உள்ள சுமை தூக்கும் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் போன்ற உடலுழைப்பு சார்ந்த தொழிலாளர்கள் வெப்ப அலையால் அதிகம் பாதிக்கப் படுகின்றனர்.

# 6 நாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதி தடைகளை நீக்கியது இந்திய அரசு



இலங்கை உட்பட ஆறு நாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

சர்வதேச சந்தையில் தேவை அதிகரித்ததன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அதன்படி, பங்களாதேஷ், ஐக்கிய அரபு இராச்சியம், பூட்டான், பஹ்ரைன், மொரிஷியஸ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மேற்படி நாடுகளுக்கான வெங்காய ஏற்றுமதிகளை எளிதாக்குவதற்கு பொறுப்பாக தேசிய கூட்டுறவு ஏற்றுமதி லிமிடெட் நியமிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேலின் போர்நிறுத்த முன்மொழிவை ஆய்வு செய்கின்றது ஹமாஸ் அமைப்பு



இஸ்ரேலின் சமீபத்திய போர்நிறுத்த முன்மொழிவை பெற்றதாகவும் அதற்கு பதிலைச் சமர்ப்பிப்பதற்கு முன் அதை ஆய்வு செய்து வருவதாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தின் காசாமுனை மீது இஸ்ரேல் நடத்தி வரும் போர் ஆறு மாதங்களுக்கு மேலாக நீடித்து கொண்டிருக்கிறது.

இந்த தாக்குதலில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்பட 34 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

காசாவின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் தரைவழித் தாக்குதல் நடத்தியது போல் தற்போது தெற்கில் உள்ள ரபா நகரில் தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.

காசா மீதான தாக்குதலால் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் இருந்து மக்கள் பெரும்பாலானோர் ரபா எல்லையில் தஞ்சமடைந்துள்ளனர்.

அங்கு தரைவழி தாக்குதல் நடத்துவது மிகப்பெரிய அளவில் உயிர்சேதத்தை ஏற்படுத்துமென அமெரிக்கா மற்றும் எகிப்து உள்ளிட்ட நாடுகள் எச்சரித்துள்ளன.

ஆனால் ரபா மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் தீவிரம் காட்டி வருகின்ற நிலையில் ஹமாஸ் அமைப்பினரிடம் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை மீட்பதற்கான பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

பணயக் கைதிகளை விடுவிக்க ஹமாசுக்கு இதுவே கடைசி வாய்ப்பு என்று இஸ்ரேல் தெரிவித்து போர் நிறுத்த முன்மொழிவை அளித்துள்ளது.

இந்த நிலையில், போர் நிறுத்தம் குறித்து ஹமாஸ் தரப்பு தெரிவிக்கையில், இஸ்ரேலின் சமீபத்திய போர் நிறுத்த முன்மொழிவை பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

அத்தோடு, அதற்கு பதிலைச் சமர்ப்பிப்பதற்கு முன் அதை ஆய்வு செய்து வருவதுடன் இஸ்ரேலின் நிபந்தனையை ஹமாஸ் அமைப்பு ஏற்குமா என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட போர் நிறுத்தத்தின் போது நூற்றிற்கும் மேற்பட்ட பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்பு மீது ரஷ்யா ஏவுகணைகளை வீசி தாக்குதல்



உக்ரைன் மீது நேற்று இரவில் ரஷ்யா சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் மற்றும் மேற்கு பகுதியில் உள்ள இவானோ-பிராங்கிவ்ஸ்க் நகரங்களை குறிவைத்து 30 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ரஷ்யா வீசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவற்றில் சுமார் 20 ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழித்ததாகவும் உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது.

அந்த நகரங்களில் உள்ள அனல்மின் நிலையங்களை இலக்காக வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் 4 அனல்மின் நிலையங்கள் கடுமையாக சேதம் அடைந்துள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக உக்ரைனின் மின் உற்பத்தி நிலையங்களை குறிவைத்து ரஷ்யா தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதனால், உக்ரைனின் பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் தொடர் எச்சரிக்கைகளை மீறி, நேட்டோ அமைப்பில் இணைவதற்கான முயற்சிகளை உக்ரைன் முன்னெடுத்ததால் அந்த நாட்டின் மீது கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்யா போர் தொடுத்தது.

இந்தப் போரில் அமெரிக்கா மற்றும் ஏனைய மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு தேவையான இராணுவ மற்றும் நிதி உதவிகளை வழங்கி பக்கபலமாக இருந்து வருகின்றன.

இதன் மூலம் உக்ரைன், ரஷ்யாவை எதிர்த்து தொடர்ந்து சண்டையிட்டு வருவதுடன் ரஷ்யாவும் இலக்கை எட்டும் வரையில் பின்வாங்க போவதில்லை என கூறி போரை தொடர்ந்து வருகிறது.

இதன் காரணமாக இரு நாடுகளுக்கு இடையிலான போர் தொடர்ந்து உக்கிரமடைந்து வருகிறது.

தற்போதைய போரில் ரஷ்யா வசம் உள்ள உக்ரைன் நகரங்களை மீட்பதற்காக உக்ரைன் இராணுவம் சண்டையிட்டு வருவதுடன் அதே சமயம் உக்ரைனின் மற்ற நகரங்களை கைப்பற்றும் நோக்கில் ரஷ்யா தனது தாக்குதல்களை விரிவுபடுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 5

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 28/04/2024

## ஸ்கார்பரோவில் நேற்று கத்திக் குத்துச் சம்பவம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 28

ஸ்கார்பரோ நகரில் ஏப்ரல் 27ஆம் திகதி மாலை இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் ஆணொருவர் C2▶



# கனடியர்கள் இப்போது முதலீடுகளில் நாட்டம் காட்டுகிறார்கள் இல்லையாம்

கனடியர்கள் இப்போது முதலீடுகளில் நாட்டம் காட்டுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக் காரணமாகவே இவ்வாறான ஒரு நிலைமை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடியர்கள் மத்தியில், வரி மீளளிப்பு கொடுப்பனவுகளை முதலீடு செய்வது வெகுவாக குறைவடைந்துள்ளது.

கனடிய இம்பிரியல் வர்த்தக வங்கி முன்னெடுத்த கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வரிச் செலுத்துகை மீளளிப்புக் கொடுப்பனவு தொகையை முதலீடு செய்வது குறித்து வெறும் 10 வீதமான கனடியர்கள் மட்டுமே திட்டமிடுகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடன் செலுத்துகை, அத்தியாவசிய பொருள் கொள்வனவு போன்றவற்றுக்கே இவ்வாறு கிட்டும் நிதி செலவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவான கனடியர்கள் ஏனைய நுகர்வு செலவுகளுக்காக இந்த தொகையை செலவிட திட்டமிட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மொன்ரியலில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயணத் திட்டம் பயனளிப்பு

கியூபெக், ஏப்ரல் 28

மொன்ரியலில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசமாக பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தச் செய்யும் வசதி பயனளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினரின் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.

2023ஆம் ஆண்டு ஜுலை முதலாம் திகதி இந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதங்களில், சிரேஷ்ட பிரஜைகளின் பொதுப்போக்குவரத்து பயன்பாடு 15 முதல் 20 சதவீதம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வயதுப் பிரிவிற்குள் தகுதியானவர்களில் 47 சதவீதமானவர்கள் 2023ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்த நிகழ்ச்சிக்காக பதிவு செய்துள்ளனர்.





# போக்குவரத்து விதி மீறல்கள் குறித்து குறுஞ்செய்தி வந்தால் நம்பாதீர்கள்!

## ஒட்டாவா நகர சபை பொது மக்களுக்கு அறிவித்தல்

ஒன்ராரியோ, ஏப்ரல் 28

போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பில் கட்டணம் செலுத்துமாறு கோரி வரும் குறுஞ்செய்திகளை நம்பி ஏமாற வேண்டாம் என ஒட்டாவா நகர சபை பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

வேகமாக வாகனம் செலுத்தியதாக கூறி பலருக்கு குறுஞ்செய்திகள் செல்வதாக தமக்கு அறியக் கிடைத்துள்ளதாக, நகர சபையின் எக்ஸ் சமூக தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இவை சட்டத்திற்கு முரணானது எனவும், நகர சபையானது ஒரு போதும் குறுஞ்செய்தியூடாக தொடர்பு கொள்ளாது எனவும் அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓட்டாவா நகரில் அமைக்கப்பட்டுள்ள கெமராக்களில் போக்குவரத்து விதி மீறல் பதிவாகும் சந்தரப்பத்தில், அது குறித்த தகவல் வாகனத்தின் வாகன இலக்கத்தகடு பதிவு செய்யப்பட்டுள்ள முகவரிக்கு தபாலில் மாத்திரமே அனுப்பி வைக்கப்படும் என நகர சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போலி வயகரா மாத்திரைகள் ஸ்கார்பரோ பகுதியில் தாராளம்

## கனடிய சுகாதார திணைக்களம் எச்சரிக்கை




கனடாவின் ஸ்கார்பரோ பகுதியில் போலி வயகரா மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கனடிய சுகாதார திணைக்களம் இது தொடர்பில் ஊடக அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

இந்த மாத்திரைகள் உண்மையான மாத்திரைகள் போன்று பொதியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலாவதியாகும் திகதி பற்றிய விவரங்கள் வழமைக்கு மாறான அடிப்படையில் காணப்படுவதாகவும் தொடரிலக்கம் பொதிகளில் அச்சிடப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போலி மருந்து மாத்திரைகள் உண்மையானவை போன்றே தென்பட்டாலும், அவற்றில் சில வேளைகளில் மருந்துப் பொள்களே அடங்கியிருக்காது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இவ்வாறான மருந்துப் பொள்களினால் பாரிய சுகாதார கேடுகள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகவொம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான போலி மாத்திரைகள் பயன்படுத்தியிருந்தால் உடனடியாக அவற்றை பயன்படுத்துவதனை நிறுத்துமாறும், அவற்றை வீசி விடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ஸ்கார்பரோவில் நேற்று...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்துள்ளார்.

லோரன்ஸ் எவனியு ஈஸ்ட் மற்றும் கோலவே வீதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை அடைந்த போது, காயங்களுடன் காணப்பட்ட நபரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பாதிக்கப்பட்டவருக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் எதுவும் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# ஒன்ராரியோவின் தென்பகுதியில் விரைவில் கோடைக்கால அறிகுறி

ஒன்ராரியோ, ஏப்ரல் 28

ஒன்ராரியோவின் தென்பகுதியில் விரைவில் கோடைக்கால அறிகுறிகள் தென்படுவதாக என்வைரன்ட்மன்ட் கனடா தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 27ஆம் திகதி தென்மேற்கு ஒன்ராரியோவில் வின்ட்சர் மற்றும் சார்னியாவில் வெப்பநிலை 26.3 பாகை செல்சியஸாக பதிவாகியிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை வெப்பநிலை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு மற்றும் மத்திய ஒன்ராரியோ பகுதியில் மழை பெய்யலாம் என எதிர்வு கூறியுள்ள என்வைரன்மன்ட் கனடா, சிறிது, சிறிதாக வெப்பநிலையும் அதிகரிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

# மொன்ரியல் விபத்தில் 51 வயதுப் பெண் சாவு



கியூபெக், ஏப்ரல் 28

மொன்ரியலுக்கு மேற்கே 50 கிலோமீற்றர் தொலைவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 51 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கியூபெக் நெடுஞ்சாலைக்குள் பிரவேசித்த வாகனம் அந்தப் பெண் பயணித்த வாகனத்தின் மீது மோதியதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்தில் கடும் காயங்களுக்கு உள்ளான அந்தப் பெண்மணியை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதன் பின்னர் சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்திற்குக் காரணமாக இருந்த மற்றைய வாகனத்தின் சாரதியான 35 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் மது போதையில் வாகனம் செலுத்தினார் எனஅவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# தவறுதலாகத் துப்பாக்கி வெடித்ததில் ஒரு பொலிஸ் அதிகாரிக்குக் காயம்

சசகெச்சுவான், ஏப்ரல் 28

ரெஜினா பகுதியில் சக பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கி தவறாக வெடித்ததில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

ரெஜினாவில் வீடொன்றில் தேடுதலில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் பொது மக்கள் எவரும் பாதிக்கப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் சசகெச்சுவான் பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.






# கெஃபியே அணியத் தடைவிதித்தமைக்காக பலஸ்தீனியர்களிடம் மன்னிப்புக் கேளுங்கள்

## குயின்ஸ் பார்க் சம்பவம் தொடர்பில் வலியுறுத்தல்

ஒன்ராறியோ, ஏப்ரல் 28

ஒன்ராறியோ மாகாண சபையில் கெஃபியே அணிவதற்கு தடைவிதித்தமை தொடர்பில் பலஸ்தீனியர்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என பலஸ்தீனிய–கனடிய இனவாதத்திற்கு எதிரான கல்வியியலாளர் பெய்ஷன் ஷபி தெரிவித்துள்ளார்.

அராபியர்கள் மற்றும் முஸ்லீம்கள் அணியும், பலஸ்தீனியர்களுடனான ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் அடையாளமாக மாறியுள்ள கெஃபியேவை குயின்ஸ் பார்க்கில் அணிவதற்கு கடந்த வாரத்தில் சபாநாயகர் தடை விதித்திருந்தார்.



இதன் தொடர்ச்சியாக, ஏப்ரல் 25ஆம் திகதி சபை அமர்வில் கெஃபியே அணிந்து வந்திருந்த உறுப்பினர் சாரா ஜமாவை சபையை விட்டு வெளியேறுமாறு சபாநாயகர் டெட் ஆர்னோட் பணித்திருந்தார்.

ஒன்ராறியோ மாகாண சபையின் இந்தச் செயல் பலஸ்தீனியர்கள் வரவேற்கப்படவில்லை என்ற கருத்தை வெளிப்படுத்துவதாக பெய்ஷன் ஷபி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த செயல் இனப் பூர்வீகத்தின் அடிப்படையில் பாரபட்சம் என அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளின் மீறல் என அவர் தெரிவித்துள்ளார்.





# ஒன்ராரியோ மாகாணப் பாடசாலைகளில் கைபேசிப் பாவனை கட்டுப்படுத்தப்படும்!

## ஒழுக்க விதிகளை தீவிரப்படுத்தத் தீர்மானம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 28

ஒன்ராரியோ மாகாண பாடசாலைகளில் கைபேசிப் பாவனையைக் கட்டுப்படுத்தவுள்ளதாக ஒன்ராரியோ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் வேப்பிங் என்ற புகைப்பிடித்தல் முறையைப் பின்பற்றுபவர்கள் தொடர்பில் விதிமுறைகளை கடுமையாக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விளக்கங்களை மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லீஸ் விரைவில் வெளியிடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண கல்வி அமைச்சு நீண்ட காலமாக கவனித்து வந்த விடயமாக இந்த புதிய கட்டுப்பாடுகள் அமையவுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# கரடியொன்றை வேட்டையாடியமைக்காக ஒருவருக்கு 10,000 டொலர்கள் அபராதம்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 18

கரடியொன்றை வேட்டையாடியமைக்காக பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த நபரொருவருக்கு 10,000 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எலக்போர்ட் பகுதியில் வேட்டையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள கிரிஷ்லி வகைக் கரடியை வேட்டையாடியமைக்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபருக்கு 15 வருடங்களுக்கு வேட்டையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

2017ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் கொலம்பியாவில் கிரிஷ்லி வகை கரடிகளை வேட்டையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.